பக்கங்கள் 16 + 04

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

## வைத்தியசாலையிலிருந்து சந்தேகநபர் தப்பியோட்டம்

(கே.வசந்தன்)

மன்னாரில் 9 வயது சிறுமி துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட நபர் வவுனியா வைத்தியசாலையில் இருந்து 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 21 புதன்கிழமை 03.04.2024 அதிர்வு 247



சென்னை விமான நிலையத்தில் மூவரும் வழியனுப்பி வைக்கப்பட்டபோது...

# இலங்கையை வந்தடைந்தனர் முருகன், பயஸ், ஜெயக்குமார்

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் தொடர் விசாரணை

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு, 33 வருடங்களின் பின்னர் விடுவிக்கப்பட்ட முருகன் றொபேர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகிய மூவரும் இன்று இலங்கையை வந்தடைந்தனர். 04






# அடுத்த நாடாளுமன்றிலேயே தேர்தல் முறைமை சீர்திருத்தம்

## மனோவிடம் ரணில், விஜயதாஸ உறுதி

"தேர்தல் முறை சீர்திருத்தம், எதிர் வரும் தேர்தல்களைத் தொடர்புபடுத்தாது. இவ்விவகாரம் அடுத்து வரும் நாடாளுமன்றத்துக்கு ஒத்திவைக்கப்படும். அது பற்றி புதிய நாடாளுமன்றத்தில் கலந்துரையாடுவோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோர் என்னிடம் உறுதியளித்துள்ளனர்."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இது பற்றி ஊடகங்களிடம் மனோ எம்.பி. மேலும் கூறியதாவது"–

"தற்போதைய விகிதாசார தேர்தல் முறையை மாற்றும் சீர்திருத்தம் தேவையற்றது என்ற நிலைபாட்டை தமிழ் முற்போக்குக் கூட்டணி அன்று முதல் எப்போதும் கொண்டுள்ளது. இதுவே எமது நிலைபாடாக நாடாளுமன்றத் தேர்தல் சீர்திருத்த தெரிவுக்குழுவிலும் தொடர்ச்சியாக இருந்துள்ளது. அன்றைய அமைச்சர், இன்றைய பிரதமர் தினேஷ் குணவர்தன, தலைமையில் கடைசியாக இடம்பெற்ற தேர்தல் சீர்திருத்த தெரிவுக்குழுவில், தேர்தல் முறை சீர்திருத்தம் தொடர்பில் ஏகமனதாக தீர்மானம் ஏற்பட்டது போன்ற தோற்றப்



பாட்டை அரசு காட்ட முயல்கின்றது. இது பச்சைப் பொய்.

பதினாறு உறுப்பினர்களில் சரிபாதி எட்டு எதிர்கட்சி உறுப்பினர்கள் தெரிவுக்குழு அறிக்கையை நிராகரித்து, அறிக்கையில் கையெழுத்திட மறுத்து விட்டோம். அங்கே ஏற்பட்ட ஒரேயொரு ஏகமனதான தீர்மானம், சட்டத்தைத் திருத்தி, விகிதாசார முறையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது என்பதாகும். அதையும்கூட அரசு செய்யவில்லை. இந்நிலையில் திடீரென அமைச்சரவையில் தேர்தல் முறை சீர்திருத்தம் வேண்டும் என்று ஒரு நாள், பிறகு இப்போது வேண்டாம் என்று இன்னொரு நாள் தீர்மானிப்பது கேலிக்கூத்து ஆகும்.

இந்நிலையில் கடந்த வாரம் ஜனாதிபதியை நான் சந்தித்தபோது இது தொடர்பில் தற்போது முன்னெடுப்புகள் இல்லை என்றார். அதேபோல், சில தினங்களுக்கு முன் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவைச் சந்தித்தபோது அவரும் இதையே எனக்குத் தெரிவித்தார். ஆகவே, இந்தப் பிரச்சினை இப்போதைக்கு முடிவுக்கு வருகின்றது.

இந்நாட்டில் எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம் மக்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே சுமார் 60 விகிதமானோர் பல மாவட்டங்களில் சிதறி வாழ்கின்றார்கள். எனவே, எமது மக்களைப் பாதிக்கும் எந்தவொரு அடாத்தான, தன்னிச்சையான தேர்தல் முறை மாற்றங்களையும் நாம் ஏற்க மாட்டோம். விகிதாசார முறையை மாற்றாமல் உள்ளக மாற்றங்களைப் பற்றி வேண்டுமானால் நாம் பேசலாம். இது தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தொன்று தொட்டு வரும் நிலைபாடு ஆகும். எதிர்வரும் தேர்தல்களில் பெரும்பான்மை கட்சிகளுடன் உடன்பாடுகள் காணும்போது இதுவும் எமது பிரதான நிபந்தனைகளில் ஒன்றாக இருக்கும்." – என்றார்.

# பாவனைக்கு உதவாத மீன்கள் சாய்ந்தமருதில் அழிக்கப்பட்டன!

## ஏனைய உணவகங்கள் மீதும் திடீர் பாய்ச்சல்!!

**(எஸ்.அஷ்ரப்கான்)**

புனித நோன்பு காலங்களில் சுகாதாரமற்ற சிற்றுண்டிகள் பொது மக்களுக்கு விற்கப்படுவதை தடுத்து உணவுப் பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொது மக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸஹீலா இஸ்ஸதீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதி காரி டாக்டர் எம்.ஜே.கே.எம். அர்ஷாத் காரியப்பர் தலைமையில் தொடர்ந்தும் திடீர் சோதனை நடவடிக்கை இடம்பெற்று வருகின்றன.

தொடர்ந்து நேற்று (02) நான்காவது நாளாகவும் சாய்ந்தமருது பிரதேச உணவகங்கள், சந்தை, சில்லறை கடைகள், மொத்த விற்பனை நிலையங்கள், சிறிய சூப்பர் மார்க்கட்கள் போன்றவற்றில் சோதனை நடவடிக்கை இடம் பெற்றது.



இதன்போது பாவனைக்கு பொருத்தமற்ற பழுதடைந்த மீன்கள் எரிபொருள் ஊற்றி அழிக்கப்பட்டன. உணவகங்கள், வெதுப்பகங்களில் மனித பாவனைக்கு பொருத்தமற்ற எலி எச்சங்கள் காணப்பட்ட உணவுப் பண்டங்கள் கைப்பற்றப்பட்டது.

கடந்த காலங்களில் சாய்ந்தமருது பிரதேச உணவகங்கள், சந்தை, சில்லறை கடைகள், மொத்த விற்பனை நிலையங்கள் போன்றவற்றை பார்வையிட்ட சாய்ந்தமருது சுகாதார வைத்திய குழுவினர் உரிமையாளர்களுக்கும், உணவு தயாரிப்பவர்களுக்கும் சுகாதார நடைமுறைகளை பேணி உணவுகளை தயாரிக்குமாறும், உணவங்கள் சுத்தமில்லாது இருத்தல், உணவு கையாளு கையில் முறையான ஒழுங்கீனமை, நீண்ட நாள்களுக்கு பொருத்தமில்லாதவாறு உணவுகளை தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருட்களின் தரம் போன்றவற்றை சுகாதார முறைப்படி பேணுமாறும் ஆலோசனை வழங்கினர். அறிவித்தல் களை பேணி நடக்காத உணவகங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்திருந்தனர். அதன் தொடர்ச்சியாகவே இந்த சோதனை நடவடிக்கை இடம்பெற்று வருகிறது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம். ஜெரின் உட்பட அலுவலக உத்தி யோகத்தர்கள் பலரும் இந்த திடீர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.



# வாகனம் மோதி குடும்பஸ்தர் சாவு!

## கலஹா பொலிஸ் பிரிவில் சோகம்

கலஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறுக்கலை பகுதியில் வாகனம் மோதி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று நள்ளிரவு 12 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 39 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

கலஹா – கண்டி பிரதான வீதியில் மேற்படி நபரை மோதிவிட்டு வாகனம் சென்றுள்ளது. இதனால் படுகாயமடைந்த நபர் வீதியில் வீழ்ந்து கிடந்துள்ளார்.

அருகில் உள்ள மக்கள் சத்தத்தைக் கேட்டு அங்கு சென்று காயமடைந்திருந்த 39 வயது நபரை, 1990 அம்புலன்ஸ் வாகனத்தை வரவழைத்து கம்பளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்தனர். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் மேலதிக விசாரணை கலஹா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# மீன்பிடிக்கச் சென்றவரை வேட்டையாடியது முதலை

(ராமு தனராஜ்)

கொஸ்லாந்த பொலிஸ் பிரிவுக் குட்பட்ட மஹ்லந்த, அளுத்வெல பிரதேசத்தில் உள்ள நீர்த்தேக்கத்தில் மீன்பிடிக்கச் சென்ற நபர் ஒருவர் இன்று காலை முதலை இழுத்துச் செல்லப்பட்ட நிலையில் காணாமல்போயுள்ளார்.

அதிலிவெவ பிரதேசத்தில் வசிக்கும் மீனவரே இவ்வாறு காணாமல்போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உமா ஓயா திட்டத்தின் கீழ் நிர்மாணிக் கப்பட்டு வரும் அளுத்வெல சிறு நீர்த் தேக்கத்தில் இன்று அதிகாலை மீன்பிடிக்கச் சென்ற நபரை முதலை இழுத்து சென்றது என்று அவருடன் மீன்பிடிக்கச் சென்ற சக நண்பனால் கொஸ்லாந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பின்னர், பொலிஸ் நிலைய அதிகாரிகள் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து காணாமல்போனவரைத் தேடும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பில் கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், சுழியோடிகளின் உதவியைப் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்








# மன்னார் பொலிஸ் நிலையம் சென்ற குடும்பஸ்தர் மீது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கொடூர தாக்குதல்

## காயமடைந்த அவர் வைத்தியசாலையில்

(மன்னார் நிருபர்)

மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் இணைந்து இன்று காலை மன்னார் பொலிஸ் நிலையம் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் மீது கடுமையான தாக்குதல் மேற்கொண்டுள்ள நிலையில் மேற்படி குடும்பஸ்தர் காயங்களுக்குள்ளான நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மன்னார், பள்ளிமுனை கிராமத்துக்கு நேற்று மாலை மன்னார் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலிஸார் சென்று பிறிதொரு நபரின் பெயரைக் கூறி அவரை விசாரித்துள்ளனர்.

இதன்போது அந்த வீட்டில் தாக்குதலுக்குள்ளான பிரதீபன் (வயது - 42) என்ற குடும்பஸ்தர் இருந்துள்ளார்.

அங்கு சென்ற பொலிஸார் வீட்டின் உரிமையாளரைக் கேட்டபோது அவர் இல்லை எனத் தெரிவித்துள்ளனர். உடனடியாக மேற்படி குடும்பஸ்தரின் இரு கையடக்கத் தொலைபேசிகளையும் பறித்த பொலிஸார், அவருடைய மோட்டார் சைக்கிளையும் எடுத்துக்கொண்டு மன்னார் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

இந்தநிலையில், அந்தக் குடும்பஸ்தர் இன்று காலை மன்னார் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யச் சென்றுள்ளார்.

இதன்போது அங்குள்ள அதிகாரிகள் மன்னார் பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாட்டைப் பதிவு செய்து விட்டு வருமாறு தெரிவித்தனர்.

இந்தநிலையில் அவர் மன்னார் பொலிஸ் நிலையம் சென்றுள்ளார்.

அவரின் மோட்டார் சைக்கிளின் ஆவணங்களைப் பொலிஸார் கேட்டுள்ளனர். இதன்போது ஆவணங்களைப் பொலிஸாரிடம் அவர் வழங்கியுள்ளார்.

பின்னர் தனது கையடக்கத்தொலைபேசிகள் மற்றும் மோட்டார் சைக்கிளை அவர் கேட்டபோது மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கூரிய ஆயுதத்தால் அவரைப் பல தடவைகள் தாக்கினார். அங்கு நின்ற தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் மேற்படி குடும்பஸ்தரைத் தாக்கினார்.

இதனைப் பொலிஸ் நிலையம் வந்த பொதுமக்கள் மற்றும் ஏனைய பொலிஸார் பார்த்துக்கொண்டிருந்தனர்.

"பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும், தமிழ் பொலிஸ் உத்தியோகத்தரும் காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொண்டனர். என்னிடம் எவ்வித விசாரனைகளும் மேற்கொள்ளவில்லை. என்னிடம் பறித்த பொருட்களையும் அவர்கள் தரவில்லை. என்னை அங்கிருந்து போகச் சொன்னார்கள். நான் காயங்களுடன் வைத்தியசாலைக்கு வந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டேன்." – என்று பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் தெரிவித்தார்.

மேற்படி குடும்பஸ்தர் மன்னார் பொலிஸாரால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து அவரது மனைவி மன்னார் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இலங்கையை....

இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தற்போது வரை விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களை அழைத்துச் செல்லச் சென்ற உறவுகள் இவர்களின் வருகைக்காகக் காத்து நிற்கின்றனர்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டவர்களில் 7 பேர் 33 வருடங்களின் பின்னர் கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்களில் நளினி முருகனின் மனைவி உள்ளிட்ட மூவர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்பதால், அவர்கள் அவர்களின் உறவினர்களுடன் இணைக்கப்பட்டனர். ஏனைய நால்வர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இலங்கை செல்வதற்கு ஆவணங்கள் இல்லை எனும் காரணத்தால் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

சுமார் ஒன்றை வருட காலமாகச் சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த நால்வரில் சாந்தன் நோய்வாய்ப்பட்டு உயிரிழந்திருந்தார்.

எஞ்சிய மூவரையும் உயிருடன், உறவினர்களிடம் கையளிக்க வேண்டும் என இந்திய அரசுக்குப் பல தரப்பினரும் அழுத்தங்கள் வழங்கியமையால் மூவரையும் இலங்கைக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்ட நிலையில் இன்றைய தினம் அவர்கள் இலங்கையை வந்தடைந்தனர்.

வெளிநாடுகளில் உள்ள தமது உறவினர்களிடம் செல்வதற்கு ஏதுவாக சகல நாட்டுக்குக்குமான கடவுசீட்டை வழங்குமாறு மூவரும் கோரிக்கை விடுத்திருந்த போதிலும், இலங்கை செல்வதற்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டு, இலங்கைக்கு அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

### வைத்தியசாலை....

தப்பியோடியுள்ளார்.

மன்னார், தலைமன்னார் பகுதியில் 9 வயது சிறுமி துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில் 55 வயதுடைய நபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

மேற்படி சந்தேகநபர், உடல் நலப் பாதிப்பு காரணமாக வவுனியா வைத்தியசாலையில் கடந்த வியாழக்கிழமை சேர்க்க ப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் இன்று காலை வைத்திய சாலையில் இருந்து தப்பியோடியுள்ளார். அவரைத் தேடும் பணியில் சிறைக் காவலர்களும், பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர்.

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்



ஈச்சலம்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இறங்குதுறை பகுதியில் இன்று (03) அதிகாலை நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்யப் பட்டுள்ளார்.

தாக்குதலில் படுகாயமடைந்த நபர் ஈச்சலம்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக் காக மூதூர் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பல னின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இறங்குதுறை பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபரே இவ்வாறு உயிரி ழந்துள்ளார்.

இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக ஒரு குழுவி னர் கூரிய ஆயுதங்களால் தாக்கி யுள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் அடையாளம் காணப் பட்டுள்ளனர் என்றும் மேலதிக விசார ணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வெளிநாட்டு வேலை வாய்ப்பு என்று கூறி 8 கோடி ரூபா மோசடி செய்தவர் கைது!



ருமேனியாவில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி 8 கோடி ரூபாவுக்கு மேல் மோசடி செய்தார் என்று கூறப்படும் சந்தேகநபரை ஏப்ரல் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மாளி காகந்த நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மாளிகாவத்தை - லக்விரு செவன வீடமைப்புத் தொகுதியில் மறைந்திருந்த பெண் ஒருவர் அண்மையில் வெளி நாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சந்தேக நபர் வெளிநாட்டு வேலை வாய்ப்பை வழங்குவதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்று தொழில் நிறுவனம் ஒன்றை நடத்தி வந்துள்ளார்.

ருமேனியாவில் பல துறைகளில் வேலை வாய்ப்பை வழங்கவும் அவர் அனுமதிப்பத்திரத்தை பெற்றவர்.

ஆனால், தனக்கு அனுமதிக்கப்படாத பணியிடங்களுக்கு அனுப்புவதாக கூறி சந்தேகநபர் பணம் பெற்றுள்ளார் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணிய கத்துக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

சந்தேக நபரிடம் பணம் கொடுத்து வேலை கிடைக்காத 88 பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பாக விசாரணை நடத்த வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணி யகத்துக்கு வருமாறு விசாரணை அதிகா ரிகள் கூறிய போதும், விசாரணை அதி காரிகள் முன் ஆஜராகாமல் சந்தேகநபர் தலைமறைவாக இருந்துள்ளார்.

இந்த மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சந்தேக நபர் வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தில் பணி புரிந்த முகாமையாளரையும் மற்று மொருவரையும் கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

# போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட இருவர் கட்டுநாயக்கவில் கைதாகினர்!

கட்டுநாயக்க, ஆண்டியம்பலம் பகுதி யில் போதைப் பொருள் கடத்தலில் ஈடு பட்டு வந்த இருவர் கட்டுநாயக்க பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேக நபரிடமிருந்து 07 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, சீதுவ வைத் தியசாலைக்கு முன்பாக போதைப் பொருள் விற்பனை செய்யும் மருந்தகம் தொடர்பிலும்தகவல்வெளியாகியுள்ளது.

அதன்படி, அந்த இடத்தை சோதனை செய்தபோது, 550 போதை மாத்திரைக ளுடன் அதனை நடத்தி வந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப் பட்ட சந்தேக நபர்கள் 19 மற்றும் 42 வயதுக்குட்பட்டவர்கள் எனவும், ஆடியம் பலம் மற்றும் சீதுவ பிரதேசத்தை சேர்ந்த வர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான விசாரணை களை கட்டுநாயக்க பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கப்பல்களில் வந்த கழிவுகள்

அமெரிக்காவின் பால்ட்டிமோர் பாலத்தில் கடந்த 26 ஆம் திகதி விபத்துக்குள்ளான கப்பல் விவகாரம் இலங்கையில் புதிய அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது என்று இப்பத்தியில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம்.

மேர்க்ஸ் நிறுவனத்தினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட சிங்கப்பூர் நாட்டின் டாலி என்ற இந்தக் கப்பலில் விபத்து சமயம் 4,700 கொள்கலன்கள் இருந்தன. வரும் 21 ஆம் திகதி கொழும்பை வந்தடையவிருந்த இக்கப்பலில் கொழும்பில் இறக்கப்பட வேண்டிய 56 கொள்கலன்களும் இருந்துள்ளன. அவற்றில் 'வகுப்பு - 9' பிரிவைச் சேர்ந்த 764 தொன் அபாயகரமான பொருள்கள் - கழிவுகள் - இருக்கின்றன என்று அமெரிக்க தேசிய போக்குவரத்துப் பாதுகாப்பு வாரியத்தை மேற்கோள்காட்டி வெளியான செய்திகள் இப்போது இலங்கையில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தி இருக்கின்றன என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

கொழும்பில் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் குறிப்பிட்ட முன் அனுமதி இல்லாமல் இக்கப்பல் அபாயகரமான பொருள்களை ஏற்றிக் கொண்டு இலங்கை நோக்கிப் புறப்பட்டிருக்காது என உலக வர்த்தக அமைப்பிற்கான (WTO) இலங்கையின் முன்னாள் தூதுவர் கோமி சேனாதிர நேற்றுத் தெரிவித்தார்.

இவ்வாறான ஆபத்தான பொருள்களை இலங்கைக்குள் இறக்குவதற்கு அங்கீகாரம் வழங்கியவர்களை அடையாளம் காண இனியும் தாமதிக்காமல் அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் சேனாதிர கோரியுள்ளார்.

இந்த நடவடிக்கையில் ஈடுபட்டவர்களின் அடையாளங்கள் அதிகார மட்டத்திற்கு நிச்சயம் தெரிந்திருக்க வேண்டும் என அவர் கூறுவதிலும் அர்த்தம் உண்டு.

இது சம்பந்தமாக விசாரணைகள் மற்றும் உண்மைகளைக் கண்டறிய அரசாங்கம் அமெரிக்காவின் உதவியை நாடலாம் என்று வெளிப்படையாகப் பேசிய அந்த முன்னாள் அதிகாரி, "பல வருடங்களாக இத்தகைய எத்தனை கப்பல்கள் கொழும்பை வந்தடைந்தன, எவ்வளவு பொருள்கள் இறக்கப்பட்டன, அவை எங்கே தள்ளப்பட்டன என்பவைதான் பிரச்சினை" என்ற நியாயமான அச்சத்தை ஏற்படுத்தும் கேள்விகளை எழுப்புகின்றார்.

இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் நாடாளுமன்றத்தில் காட்டமாகக் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

''பாசல் சர்வதேச உடன்படிக்கையின் பிரகாரம் துறைமுகத்தில் கப்பல்களில் இறக்குமதி, ஏற்றுமதி, பரிமாற்றம் மற்றும் நிறுத்தி வைத்தல் ஆகிய 4 விடயங்களிலும் மத்திய சுற்றாடல் அதிகார சபை அதற்கான அனுமதியை வழங்க வேண்டும். இந்தக் கப்பலின் பொருள்களுக்கான அனுமதி மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து பெறப்படவில்லை. நாட்டில் யாருக்கும் தெரியாமல் இவ்வாறான பொருள்கள் அனுப்பப்படுவதில்லை. இது மிகவும் ஆபத்தான நிலை'' - என எதிர்க்கட்சித் தலைவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

''இந்த ஆபத்தான நிலை குறித்து ஒரு நாடு என்ற ரீதியில் விசாரணை நடத்தப்பட வேண்டும். மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதியின்றி எவ்வாறு இவ்வாறான தீங்கு விளைவிக்கும் பொருள்களை நாட்டுக்குள் கொண்டு வர முடியும் என்பதை நாம் ஆராய வேண்டும்'' - என எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

பொதுவாக, வரும் கப்பலின் உள்ளடக்கம் 72 மணி நேரத்திற்கு முன்னதாகவே இலங்கை துறைமுக அதிகார சபைக்குத் தெரிவிக்கப்படும் என்று கூறும் சபையின் தலைவர் கீத் டி பெர்னார்ட், அந்தக் கப்பல் ஏப்ரல் 21 ஆம் திகதியே இலங்கையின் துறைமுகத்தை வந்தடையவிருந்ததால் அதிகார சபைக்கு கப்பலின் உள்ளடக்கம் மற்றும் கொள்கலன்கள் குறித்து இதுவரை எதுவும் தெரியாது என்றும் கூறுகின்றார்.

அவர் கூறுவது உண்மையாகவும் நியாயமாகவும் இருக்கலாம். மூன்று வாரங்களுக்குப் பின்னர் வரப் போகின்ற கப்பல் குறித்து, உண்மையான முடிவுகளை இப்போது எடுக்க முடியாதுதான். ஆனால், இதற்கு முன்னர் இந்த வகையறாக்களில் இலங்கை வந்த கப்பல்கள் இப்படி இறக்கிச் சென்ற அபாயகரமான கழிவுப் பொருள்கள் பற்றிய நுணுக்கமான ஆய்வு ஒன்றை முன்னெடுத்து, நேர்ந்துள்ள விபரீதங்களை வெளிக் கொணரலாம் அல்லவா? செய்வார்களா?

''இலங்கை அரசாங்கம் பசுமைக் கொள்கையை கடைப்பிடிப்பதாகக் கூறி சர்வதேச சமூகத்திற்கு நம்பிக்கையான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது. அதனால் இது தொடர்பில் உடனடியாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். விசாரணை செய்ய வேண்டும். குற்றச் செயல் இடம்பெற்றிருந்தால் அதனை அம்பலப்படுத்தி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் கோரிக்கை நியாயமானது.



# ஊர்வலமாக வந்து வலுச்சேர்க்கும் மக்கள்! தீவிரமடையும் கல்முனை தமிழர் போராட்டம்!!

(வி.ரி.சகாதேவராஜா)

ஊர்வலமாக பொது மக்கள் வந்து போராட்டத்தில் பங்கேற்கின்றனர். இதனால் கல்முனை தமிழர் போராட்டம் மேலும் தீவிரமடைந்துள்ளது.

இன்று (3) புதன்கிழமை பத்தாவது நாளாகப் போராட்டம் கல்முனை வடக்கு பிரதேச செயலக முன்றலில் நடைபெற்றது.

சுட்டெரிக்கும் வெயிலில் நடைபவனியாக வந்து பெரும் எண்ணிக்கையான பொது மக்கள் பங்கேற்றனர்.

தமக்கு இழைக்கப்படும் அநீதிகள் பற்றிய கோரிக்கைகள் தாங்கிய பதாதைகளுடன் நடைபவனியாக சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம் வந்து கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் முன்பாக அமர்ந்திருந்து மக்கள் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.









# சுற்றுலா சென்ற தனியார் பஸ் திடீரெனத் தீப்பற்றி எரிந்தது!

மட்டக்குளிய - இக்பாவத்தை பகுதியில் சுற்றுலா சென்ற தனியார் பஸ் ஒன்று இன்று (03) அதிகாலை திடீரெனத் தீப்பற்றி எரிந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த பஸ் சாரதி மற்றும் உதவியாளர் ஆகிய இருவரும் வீதியில் பஸ்ஸை நிறுத்திவிட்டுத் தேநீர் அருந்தச் சென்ற போதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கண்டி நோக்கிச் சென்ற சுற்றுலா பஸ்ஸே இவ்வாறு தீப்பற்றி எரிந்துள்ளது. இதன்போது பஸ்ஸில் யாரும் இருக்கவில்லை எனவும் கூறப்படுகின்றது.

இந்த நிலையில், தீ விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கொட்டாஞ்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# இசை நிகழ்ச்சியில் ஏற்பட்ட தகராறு; தாக்கப்பட்ட தந்தை உயிரிழந்தார்!

இசை நிகழ்ச்சியின் போது மகனுக்கும் நண்பர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் தந்தையொருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று நாரம்மல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இல-80, கொங்கஹகொடுவ, கஜுக முவ, மேவெவ என்ற முகவரியில் வசிக்கும் பிரதீப் குணதிலக்க (43) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவர் மீன் விற்பனையை தொழிலாக செய்து வரும் நிலையில், கடந்த 28 ஆம் திகதி முந்தல் பகுதியில் இடம் பெற்ற இசை நிகழ்ச்சிக்கு மகனுடன் சென்றுள்ளார்.

இதன்போது இரவு இசை நிகழ்ச்சியில் மகனின் நண்பர்கள் அவரை சுற்றி வளைத்து தாக்க முற்பட்டுள்ளனர். இசை நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருந்த தந்தை, மகனை நண்பர்கள் குழுவிலிருந்து காப்பாற்றியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து மீண்டும் இசை நிகழ்ச்சி முடிந்ததும் அதிகாலை 1.45 மணியளவில் தந்தையும் மகனும் வீட்டுக்குச் செல்வதற்காக அரங்கிலிருந்து வெளியே வந்தபோது, இருபது பேர் கொண்ட கும்பல் தந்தையையும் மகனையும் தாக்கியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது தந்தையை போத்தலால் தாக்கி, ஹெல்மெட்டால் தலையில் அடித்து காயப்படுத்தியுள்ளனர்.

இதனைத்தொடர்ந்து தாக்குதலுக்கு இலக்கான நபர் உடனடியாகக் குருநாகல் போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டார். அங்கிருந்த , நாரம்மல மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, கடந்த 30 ஆம் திகதி தலையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

இந்த அறுவை சிகிச்சைக்கு பின் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த அவர், முதலாம் திகதி உயிரிழந்துள்ளார்.

இந்த நிலையில், தாக்குதல் நடத்தியவர்களைக் கண்டறிய விசாரணைகளை ஆரம்பித்துள்ள பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று கருதப்படும் பிரதான சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்.

மேலும், ஏனைய சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளனர்.




# யாழ். பலாலி சர்வதேச விமான நிலையத்தை குத்தகைக்கு வழங்க விண்ணப்பம் கோரல்

யாழ். சர்வதேச விமான நிலையத்தை குத்தகைக்கு வழங்குவது தொடர்பில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தத் தகவலை துறைமுகங்கள் கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவந்துள்ளதாவது,

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தைத் தனியார் துறையினருக்குக் குத்தகைக்கு வழங்குவது தொடர்பில் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் விருப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதற்கு பொருத்தமான முதலீட்டாளரைத் தெரிவு செய்ததன் பின்னர் மேலதிக பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மத்தளை விமான நிலையத்தின் செயற்பாடுகளை இந்திய மற்றும் ரஷ்ய நிறுவனங்களுக்கு மாற்றுவதற்கான யோசனை, நிதி அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# இறுக்கமாகக் கண்காணிக்கப்படவுள்ள யாழ். போக்குவரத்து நடைமுறைகள்

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் போக்குவரத்து நடைமுறைகள் இறுக்கமாகக் கண்காணிக்கப்படவுள்ளன என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்க தெரிவித்தார்.

போக்குவரத்தை சீர்செய்வது தொடர்பில் பல்வேறு செயற்றிட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு அவை நடைமுறைக்குக் கொண்டு வரப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் தலைக்கவசம் இல்லாமல் வாகனங்களைச் செலுத்துவோர், திறன்பேசிகள் மற்றும் அலைபேசிகளைக் கதைத்தபடி சாரத்தியத்தில் ஈடுபடுவோர், பாதசாரிகள் கடவைகள் இருக்கத்தக்கதாக அதற்கு அருகாக வீதியைக் கடப்போர், வீதிகளில், வாக



னங்களின் பயணப் பாதையில் எச்சில், வெற்றிலை என்பனவற்றைத் துப்புவோர், போக்குவரத்து ஒழுக்கு மீறல்களில் ஈடுபடுவோர் தொடர்பில் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அத்துடன், பாடசாலைகள், கல்வி நிலையங்கள் மற்றும் வணிக வளாகங்களுக்கு அருகாகவும் நெரிசல் மிகுந்த இடங்களிலும் கூடுதலாகப் பொலிஸார் களமிறக்கப்பட்டு வீதிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்படுகின்றன.

கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட போக்குவரத்து விழிப்புணர்வுத் திட்டத்தை இந்த வருடமும் தொடர்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, பொது மக்கள் சீரானதும் ஆரோக்கியமானதுமான போக்குவரத்தை மேற்கொண்டு, தேவையற்ற அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.-என்றார்.






# கல்முனை பற்றிமாவின் மாணவர் தலைவர்களுக்குச் சின்னம் சூட்டல்

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கில் புகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் பெண்கள் பிரிவில் கனிஷ்ட மாணவத் தலைவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் புதிதாக தெரிவு செய்யப்பட்ட கனிஷ்ட மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வும் நேற்று (02) செவ்வாய்க்கிழமை கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ச.இ. றெஜினோல்ட் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான பீட சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் திருமதி எஸ். சதாநாதன் கலந்து கொண்டார்.



# ‘பட்டறிவு பகிர்வு’ நூல் அறிமுக விழா!

(அஷ்ரப் ஏ சமத்)

கனடா, தமிழ்க் கல்லூரித் தலைவர் சமூக சிற்பி வி.எஸ்.துரைராஜாவின் ‘பட்டறிவு பகிர்வு’ நூல் அறிமுக விழா கொழும்பு கலை, இலக்கிய, ஊடக நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் நேற்று (02) செவ்வாய்க்கிழமை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடை பெற்றது.

மருத்துவர் சாகித்யரத்னா தி.ஞான சேகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நூலின் முதல் பிரதியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தின் ஆலோசகர் புரவலர் ஹாசீம் உமர் நூலசிரியரிட மிருந்து பெற்றுக்கொண்டார்.



இந்த விழாவில் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் வி .ஆனந்தசங்கரி, முனைவர் சதீஷ்குமார், தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில்வேலவர், சிரேஷ்ட சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா, ஆரோக்கியம் பிரான்சிஸ், த. அரிய ரத்தினம், லீலாவதி மோகனசுந் தரம், கே. பொன்னுத்துரை, உமாசந்திரா பிர காஷ், கலாநிதி, சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா ஆகியோர்கள் ஆசியுரை, நூல் நயப்புரைகள், வாழ்த் துக்களைத் தெரிவித்தனர்.





# 6 ஆயிரத்து 877 பால் பண்ணைகள் நுவரெலியா மாவட்டத்தில் மூடப்பட்டன

(மஸ்கெலியா)

2023 ஆம் ஆண்டில் நுவரெலியா மாவட்டத்தில் 6 ஆயிரத்து 877 பால் பண்ணைகள் மூடப்பட்டுள்ளன.

மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் அறிக்கை இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் கே.டபிள்யூ.எம். தெதுனுபிட்டிய தெரிவிக்கையில்,

நுவரெலியா மாவட்டத்தில் 2023 இல் 9 ஆயிரத்து 432 பதிவு செய்யப்பட்ட பால் பண்ணைகள் இருந்தன. 2023 இல் நுவரெலியா மாவட்டத்தில் 149 புதிய பால் பண்ணைகள் புதிதாக பதிவு செய்யப்பட்டன. 2023 ஆம் ஆண்டில், நுவரெலியா மாவட்டத்தில் 30,651 கறவை மாடுகள் பதிவு செய்யப்பட்டன. அந்த ஆண்டில் 54,836,230 லீற்றர் பால் உற்பத்தி செய்யப்பட்டது.

2022 ஆம் ஆண்டில் நுவரெலியா மாவட்டத்தில் மொத்தத் திரவ பால் உற்பத்தி 55,379,619 லீற்றராக இருந்தது. 2023 ஆம் ஆண்டு மொத்த திரவ பால் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில், 543,389 லீற்றர் பால் குறைந்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் கொத்மலை மற்றும் பொகவந்தலாவ மற்றும் மஸ்கெலியா ஆகிய கால்நடை வைத்திய பிரிவுகளுக்கு கால்நடை உத்தியோகத்தர்கள் இல்லை. ஹட்டன் கால்நடை அலுவலகங்களில் இருந்து கால்நடை வைத்தியர்கள் கொத்மலை கால்நடை வைத்திய அலுவலகத்தின் கடமைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தீவனம் உள்ளிட்ட மாட்டுத் தீவனங்களின் விலை உயர்வு, புல் கொள்முதலில் சிரமம், போக்குவரத்துக் கட்டண உயர்வு, கறவை மாடுகள் கொள்வனவு போன்றவற்றுக்கு அதிக செலவு செய்ய வேண்டியுள்ளது.

கறவை மாடுகளை அமைப்பதற்கு உதவி கிடைக்காமை, திரவ பாலுக்கு நியாயமான விலை கிடைக்காமை, கறவை மாடு முகாமைத்துவத்துக்கான ஊக்கத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாமை, அதிகாரிகள் முறையான கண்காணிப்பு இல்லாமை, கால்நடை வைத்தியர்களின் ஏற்றத்தாழ்வு, குட்டிகளுக்கு அக்கறையின்மை போன்ற பல காரணங்களால் கறவை மாடுகளை பராமரிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது என்று நுவரெலியா மாவட்ட பால் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான சிக்கலான நிலைமைகள் அதிகரித்து வருவதால் பால் பண்ணையில் ஈடுபட்டுள்ள பலர் இந்த முறையை விட்டு வெளியேறி வருகின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வந்து நுவரெலியா மாவட்டத்தில் உள்ள பண்ணையாளர்கள் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். அத்துடன் பொகவந்தலாவ மற்றும் மஸ்கெலியா ஆகிய இரண்டு பகுதிகளில் உள்ள மிருக வைத்திய சாலைக்கு நிரந்தர மிருக வைத்தியர்கள் நியமிக்க வேண்டும். - என்றார்.



# மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு புதிய வைத்திய அத்தியட்சகர் நியமனம்

(மன்னார் நிருபர், பாறுக் ஷிஹான் )

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக கடமையாற்றிய நிலையில், வைத்திய நிர்வாக சேவை பதவி உயர்வு மற்றும் இடமாற்ற கட்டளையின் பிரகாரம் வைத்தியர் அஸாத் எம். ஹனீபா சிரேஷ்ட தரத்துக்கு உள்ளீர்க்கப்பட்டு மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலைக்குப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கமைவாக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகரான வைத்தியர் அஸாத் எம். ஹனீபா நேற்று (02) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் வைத்தியர் திருமதி சகீலா இஸ்ஸ டீ னிடமிருந்து விடுவிப்பு கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.

வைத்தியர் அஸாத் எம். ஹனீபா சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்தி, தரமுயர்த்தல் மற்றும் அதன் வளர்ச்சிப் பாதைக்கு ஆற்றிய அளப்பெரும் சேவைகளை நினைவு கூர்ந்து பாராட்டி பேசிய பிராந்திய பணிப்பாளர் மற்றும் பிரிவு தலைவர்கள் தமது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்து கொண்டார்.

# கல்முனைப் பிரதேச செயலகப் பிரச்சினைக்கு முஸ்லிம் தரப்பினர்கள் எவரும் காரணமல்லர்!

## முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் ஹரீஸ் தெரிவிப்பு

(அபு அலா)

வடகிழக்கில் தமிழ், முஸ்லிம் இனம் அரசியல் தீர்வை, அதிகாரப் பகிர்வை வேண்டி நிற்கின்றபோது கல்முனை மாநகரத்தில் வெறுமனே ஒரு வட்டாரத்தில் 3,500 தமிழ் மக்கள் முஸ்லிம்களோடு இணைந்து வாழ்வதற்கு தமிழ் தலைமைகள் இடமளிக்காதபோது எவ்வாறு வடக்குக் கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக அதிகாரப் பகிர்வை எட்ட முடியும்?

நாம் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் அல்லர். கல்முனையில் தமிழ் மக்களுக்கென ஓர் எல்லையுடனான பிரதேச செயலகம் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று நாம் வலியுறுத்துகிறோம்.

–இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் எச்.எம். எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (02) இடம்பெற்ற வங்கி (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளமை வருமாறு:-

கல்முனை பிரதேச செயலகப் பிரச்சினைக்கு முஸ்லிம் அரசியல் தலைமைகளோ முஸ்லிம் எம்.பிக்களோ காரணமல்லர்.

மேன்முறையீட்டு நீதிமன்றம், தமிழ் தரப்பினர் வேண்டி நிற்கும் கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம், காணி அதிகாரம் போன்றவற்றை இடைக்கால தீர்ப்பில் நிராகரித்துள்ள நிலையிலும் வழக்கு இன்னும் முடியாத நிலையிலும் இந்தப் பிரச்சினையில் அரசு எப்படி தலையிட முடியும்?

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் எம்.பிக்கள் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் தொடர்பாக பல கருத்துக்களை தெரிவித்திருந்தார்கள். கல்முனை நகரத்தில் கல்முனை பிரதேச செயலகம் ஒன்றும் அதேநேரம் கல்முனை உப பிரதேச செயலகம் ஒன்றும் இயங்கி வருகின்றன.

இந்த உப பிரதேச செயலகம் 1989 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி பொது நிர்வாக அமைச்சின் ஒரு கடிதத்தின் ஊடாக உருவாக்கப்பட்டது.

ஆனால் அது சம்பந்தமாக அந்த நேரத்தில் இருந்த அமைச்சரவை தீர்மானமோ அல்லது வர்த்தமானி பிரகடனமோ அந்த உப பிரதேச செயலகத்துக்கு இருக்கவில்லை.

அன்றிருந்த யுத்த சூழ்நிலை காரணமாக அப்போது கல்முனை பிராந்தியத்தில் இருந்த அன்றைய ஆயுத இயக்கங்களின் உறுப்பினர்கள் பல அச்சுறுத்தல்களை மேற்கொண்டு பல வந்தமான முறையில் இந்த உப பிரதேச



செயலக உருவாக்கம் ஏற்படுத்தப்பட்டது.

இருந்தும் தமிழ், முஸ்லிம் ஒற்றுமை காரணமாக அன்றிருந்த முஸ்லிம் அமைச்சரவை அமைச்சர், அதே போன்று பின்னர் வந்த அமைச்சர்கள் எல்லோரும் இதனை பேச்சு வார்த்தை ஊடாகத் தீர்க்க வேண்டும் என்பதற்காக தமிழ் மக்களுக்கென வேறு எல்லையுடனான ஒரு பிரதேச செயலகமும் முஸ்லிம் மக்களுக்கென ஓர் எல்லையுடனான பிரதேச செயலகமும் உருவாக்கப்பட வேண்டுமென்ற கொள்கை ரீதியான உடன்பாட்டுக்கு வந்திருந்தார்கள்.

குறிப்பாக இந்த உப பிரதேச செயலகம் ஒரு நிலத்தொடர்பற்ற ரீதியில் இயங்கி வருவதன் காரணமாக பூகோள ரீதியாக பல பிரச்சினைகள், சர்ச்சைகள் இருக்கும் சூழ்நிலையில்தான் ஓர் எல்லை ஊடான இரு பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட வேண்டுமென்ற இணக்கப்பாட்டுக்கு சமூகத் தலைவர்கள் முன் வந்திருந்த போதும் துர்ப்பாக்கியமாக அது நடைபெறவில்லை.

இந்தச் சபையில் திங்கட்கிழமை தமிழரசுக்கட்சியின் தலைவர் சிறிதரன் பேசுகின்றபோது சில உண்மைகளை கூறியிருந்தார். அதாவது கல்முனை வடக்கு உப பிரதேச செயலக எல்லைக்குள் 3,500 முஸ்லிம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். பள்ளிவாசல்கள், அரபுக் கல்லூரிகள் இருக்கின்றன. முஸ்லிம் பாடசாலைகள் இருக்கின்றன என கூறியிருந்தார்.

இந்த விடயத்திலிருந்தே இங்கு தெளிவுபடுத்தலாமென நினைக்கின்றேன். கல்முனையில் இருக்கும் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒரே மொழியை பேசி 4.5 சதுர மைலுக்குள் அடர்த்தியாக வாழ்கின்ற நிலையில், யுத்தகாலத்தில் சுயநல அரசியல் சக்திகளால் மக்கள் பிரிக்கப்பட்டு கல்முனையில் பொதுவான நிர்வாகத்தின் கீழ் வாழ முடியாது, இன ரீதியான ஓர் உப பிரதேச செயலகம் உருவாக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் பிரிந்து சென்றார்கள்.

பிரிந்திருந்தும் கூட அந்த பிரிக்கப்பட்ட உப பிரதேச செயலகத்துக்குள் 3,500 முஸ்லிம் மக்களை அவர்களின் விருப்பமில்லாமல் நிர்வாகம் செய்து கொண்டிருக்கின்றார்கள். அங்கு பள்ளிவாசல்கள், முஸ்லிம் பாடசாலைகள், முஸ்லிம் மக்களின் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் காணிகள், பஸார்கள் உள்ளன. இவை பலாத்காரமான முறையில் உப பிரதேச செயலகத்துக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளமையால் முஸ்லிம் மக்கள் பாரிய அநீதிக்குட்படுத்தப்பட்டமை தான் வரலாறு.

இவ்வாறு அநீதிக்குட்படுத்தப்பட்ட விடயம் சம்பந்தமாக நாம் பேச்சு ஊடாகத் தீர்வு காண விரும்பி 2017 ஆம் ஆண்டு அப்போது பொதுநிர்வாக அலுவல்கள் அமைச்சராக இருந்த வஜிர அபேவர்தனவின் வீட்டில் இரவு, பகலாக சம்பந்தன், மாவை சேனாதிராஜா, சுமந்திரன் போன்றோருடன் நாம் பேசியிருந்தோம்.

முஸ்லிம் மக்கள் இவ்வாறு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதேபோன்று எல்லை நிரந்தரமாக பிரிக்கின்றபோது பிரிக்கப்படுகின்ற முஸ்லிம் பெரும்பான்மை பிரதேச செயலக பிரிவில் 3,500-4,000 தமிழ் மக்கள் வாழ வேண்டிவரும். அவ்வாறு வருகின்ற போது இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணலாமென்று நாம் எமது யோசனையை முன்வைத்தோம்.

எவ்வாறு கல்முனை வடக்கு உப பிரதேச செயலக பிரிவில் 3,500 முஸ்லிம் மக்கள் வாழ்கின்றார்களோ அதேபோன்று முஸ்லிம் பெரும்பான்மை பிரதேச செயலக பிரிவில் 3,500-4,000 தமிழ் மக்கள் வாழ்கின்றபோது இதற்கொரு நிரந்தரமான தீர்வு குறிப்பாக கல்முனை வடக்கு தமிழ் மக்களுக்கு ஒரு பிரதேச செயலகம் மட்டுமல்லாமல் ஓர் உள்ளூராட்சி சபையும் கிடைக்கும்.

எனவே இவ்வாறான ஒரு தீர்வை முன் வைப்போம் எனக்கூறியபோது ஒரு தமிழ் மகனும் கல்முனை பிரதேச செயலகத்திற்குள் வாழ முடியாது, இதற்கு நாங்கள் உடன்பட முடியாது என்று கூறி இன ரீதியான ஒரு பிரதேச செயலகத்தை உருவாக்க வேண்டும் என்பதாகவே யுத்தம் முடிந்த பின்பும் இவர்களின் சிந்தனை இருக்கின்றது.

ஆனால் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்துக்குள் 3,500 முஸ்லிம் மக்கள் வாழமுடியும், ஆனால் தமிழ் மக்கள் முஸ்லிம் பிரதேச செயலகத்துக்குள் வாழ முடியாது என்று கூறுவதனால் இன்று அங்கு இரு சமூகங்களக்கும் அசௌகரியம் ஏற்படுகிறது. இந்த விடயத்தை தமிழ் அரசியல் தலைமைகள் செய்து கொண்டிருக்கின்றன.

நாம் இன்றும் கூறுகின்றோம், நாம் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் அல்லர். கல்முனையில் தமிழ் மக்களுக்கென ஓர் எல்லையுடனான பிரதேச செயலகம் அமைத்துக்கொடுக்கப்பட வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம்.- என்றார்.



# தாய்வானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்; சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது





தாய்வானின் கிழக்கு பகுதியில் இன்று காலை 7.4 மெக்னிடியூட் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

அனர்த்தத்தினால் கட்டடங்கள் பலவற்றுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

25 ஆண்டுகளுக்கு பின்னர் தாய்வானில் இவ்வாறு சக்திவாய்ந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலநடுக்கத்தில், ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும் பலர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலநடுக்கத்தை அடுத்து, தாய்வான், ஜப்பான், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 3 மீட்டர் வரை சுனாமி ஏற்படும் என்று ஜப்பானின் வானிலை ஆய்வு நிறுவனம் கணித்துள்ளது.

வலுவான நிலநடுக்கம் காரணமாக தைபே நகரின் பல பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. சுனாமி எச்சரிக்கை காரணமாக ஜப்பானின் ஒகினாவாவின் தெற்கு மாகாணத்திற்கு அருகிலுள்ள கடலோரப் பகுதிகளில் வசிப்பவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


தாய்வானின் கிழக்கு பகுதியில் கட்டடங்கள் அசையும் காணொலி தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டுள்ளது. தைபேயில் சுரங்கப்பாதை சேவையும், தீவு முழுவதும் ரயில் சேவையும் நிறுத்தப்பட்டன.

பூமிக்கு கீழே சுமார் 35 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் தெற்கு ஜப்பானிய தீவுக் குழுவான ஒகினாவாவிற்கு 3 மீற்றர் வரை சுனாமி ஏற்படும் என்று ஜப்பான் வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.







# ஜோ பைடனுக்கும் ஷி ஜின்பிங்கிற்கும் இடையே நேர்மையானதும் ஆக்கபூர்வமானதுமான சந்திப்பு



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கும் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கிற்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

காலநிலை மாற்றம் மற்றும் போதைப் பொருள்களுக்கு எதிரான கூட்டு நடவடிக்கைகள் தொடர்பில் இருவரும் கலந்துரையாடினர் என தெரிவிக்கப்படுகிறது.

எனினும் தாய்வான் மற்றும் பொருளாதார விடயங்களில் இரு தரப்பினருக்கும் இடையே கருத்து வேறுபாடு காணப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க ஜனாதிபதி தாய்வானுக்கான தங்களது ஆதரவை இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

எனினும் தென்சீன கடலில் அமெரிக்காவின் தலையீட்டை சீன ஜனாதிபதி விமர்சித்துள்ளார்.

அத்துடன், சீனா மற்றும் அதற்கு சொந்தமான நிறுவனங்கள் மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார தடைகள் குறித்தும் ஷி ஜின்பிங் அதிருப்தியை வெளியிட்டுள்ளார் என சர்வதேச ஊடகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

கருத்து வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும் வெள்ளை மாளிகை மற்றும் சீன அரச ஊடகங்கள் இந்த கலந்துரையாடலை 'நேர்மையானதும் ஆக்கபூர்வமானதுமான' உரையாடல் என சுட்டிக்காட்டியுள்ளன.

## ட்ரம்பிற்கு எதிராக குற்றவியல் விசாரணை



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்க்கு எதிரான முதல் குற்றவியல் விசாரணை தொடங்க உள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விசாரணை எதிர்வரும் ஏப்ரல் 15 ஆம் திகதி தொடங்கவுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த ஆபாசப்பட நடிகை ஸ்டார்மி டேனியல்ஸ் உடன் தொடர்பில் இருந்தமையை மறைப்பதற்காக அவருக்கு பணம் வழங்கினார் என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

ட்ரம்ப் மீதான குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டால், அது குடியரசு கட்சிக்கு பின்னடைவாக அமையும் என தெரிவிக்கப்படுகிறது.

## பிலிப்பைன்ஸில் கடும் வெப்பநிலை; பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன



பிலிப்பைன்ஸில் நிலவும் கடும் வெப்பநிலை காரணமாக நூற்றுக்கணக்கான பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

அந்நாட்டின் கல்வி அதிகாரிகள் நேற்று இந்த விடயத்தினை தெரிவித்துள்ளனர்.

அதன்படி, தலைநகர் மணிலாவிலுள்ள பாடசாலைகள் உட்பட நூற்றுக்கணக்கான பாடசாலைகளில் நேரடி வகுப்புகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மணிலாவில் 43 பாகை செல்சியஸ் வெப்பநிலை நிலவும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மாநில உரிமைகள் அனைத்தையும் மீட்பதற்கு தி.மு.க. கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும்

## உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்



மாநில உரிமைகள் அனைத்தையும் மீட்பதற்கு தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என அமைச்சரும், தி.மு.க. இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னையில் கொளத்தூர், தண்டையார்பேட்டை பகுதியில் வடசென்னை தி.மு.க. வேட்பாளர் கலாநிதி வீராசாமியையும், புரசைவாக்கத்தில் மத்திய சென்னை தி.மு.க. வேட்பாளர் தயாநிதி மாறனையும் ஆதரித்து, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று பிரச்சாரம் செய்தார்.

இதன்போது அவர் உரையாற்றுகையில்,

“கடும் நிதி நெருக்கடியிலும் மகளிருக்கு கட்டணமில்லா பஸ் பயணத் திட்டத்தை அறிமுகம் செய்தார் முதல்வர். இதனால், 3 ஆண்டுகளில் பெண்கள் 460 கோடி தடவை பயணங்கள் செய்துள்ளனர். அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மீதான வழக்குகளைக் கொண்டு பா.ஜ.க. மிரட்டுகிறது.

அதுபோல தி.மு.க. அமைச்சர்களை மிரட்ட முடியாது. தமிழ்நாட்டில் இருந்து செலுத்தப்படும் ஜி.எஸ்.டி. வரியில் 1 ரூபா செலுத்தினால் மத்திய அரசு நமக்கு 29 பைசா மட்டுமே திரும்ப தருகிறது. மாநில உரிமை நசுக்கப்படுகிறது.

மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனையை மத்திய அரசு இன்னமும் கட்டி முடிக்கவில்லை. ஆனால், பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் எய்ம்ஸ் மருத்துவமனை செயல்பாட்டுக்கே வந்து விட்டது.

தமிழ் மீது பற்றுள்ளவாறு பேசும் பிரதமர், தமிழின் வளர்ச்சிக்கு பணம் ஒதுக்காமல் சம்ஸ்கிருதத்துக்கு 1,500 கோடி ரூபா ஒதுக்கியுள்ளார். சமையல் எரிவாயு, பெட்ரோல் என அனைத்து விலையும் உயர்த்தப்பட்டுள்ளது.

அண்மையில் கனமழை பெய்த போது முதல்வர் உள்ளிட்ட அனைவரும் களத்தில் இருந்தோம். தமிழகத்தில் புயல், வெள்ள பேரிடர்காலங்களில் பிரதமர் வரவும் இல்லை. ஒரு பைசா கூட நிதியும் தரவில்லை. இதை எதிர்க்கட்சித் தலைவர் தட்டிக் கேட்கவில்லை.

எண்ணூர் வரை மெட்ரோ ரயில் நீடிக்கப்படும், துறைமுகம் தொகுதியில் துணை மின்நிலையம் அமைக்கப்படும், வில்லிவாக்கத்தில் புதிய பன்னோக்கு மருத்துவமனை கட்டப்படும், விடுபட்ட இடங்களில் மழைநீர் வடிகால் அமைக்கப்படும், வீட்டு மனைப்பட்டாவும் வழங்கப்படும்.

இதுபோல பல்வேறுவாக்குறுதிகளை அளித்துள்ளோம். ஜூன் 3 ஆம் திகதி முன்னாள் முதல்வர் மறைந்த கருணாநிதியின் பிறந்தநாள். ஜூன் 4 ஆம் திகதி வாக்குஎண்ணிக்கை. அதில், 40 இற்கு 40 தொகுதிகளில் வெற்றி பெற்று அவருக்கு பரிசாக அளிக்க வேண்டும்.” – என்றார்.

# காங்கிரஸ் மாநில செயலாளர் அ.தி.மு.கவில் இணைந்தார்



தமிழக காங்கிரஸ் மாநில செயலாளரும், முன்னாள் எம்.எல்.ஏவுமான மலேசியா எஸ்.பாண்டியன் பழனிசாமி முன்னிலையில் நேற்று அ.தி.மு.கவில் இணைந்தார்.

தமிழக காங்கிரஸ் கொமிட்டியின் மாநில செயலாளர் மலேசியா எஸ்.பாண்டியன். இவர் தமிழ்நாடு யாதவ மகாசபை மாநில துணைத் தலைவராக உள்ளார். மேலும், கடந்த 2016- 2021 இல் முதுகுளத்தூர் சட்டப்பேரவை தொகுதி எம்.எல்.ஏவாகவும் இருந்தார்.

இவர் நேற்று காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகி அ.தி.மு.கவில் இணைந்தார். திருப்பத் தூரில் நேற்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமியை சந்தித்து தன்னை கட்சியில் இணைத்துக் கொண்டார்.

இந்த நிகழ்வின்போது, முன்னாள் அமைச்சர்கள் ஆர்.பி. உதய குமார், கே.சி.வீரமணி, ராமநாத புரம் மாவட்ட செயலாளர் எம்.ஏ.முனியசாமி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# இலங்கை கடற்படையினர் மீது பா.ஜ.கவும் காங்கிரஸும் நடவடிக்கை எடுக்காதது ஏன்?

## கச்சதீவு விவகாரம் தொடர்பில் பழ.நெடுமாறன் கேள்வி



"கச்சதீவு பற்றி பேசும் பா.ஜ.கவும் காங்கிரஸ்/ம், மீனவர்களைத் தாக்கும் இலங்கை கடற்படை மீது நடவடிக்கை எடுக்காதது ஏன் என்பது குறித்து விளக்க வேண்டும்."

– இவ்வாறு உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில்,

"இந்தியப் பெருங்கடலில் செல்லும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சரக்குக் கப்பல்கள், பயணிகள் கப்பல்களைத் தாக்கி கொள்ளையடிக்கும் சோமாலியா கடற்கொள்ளையர்களிடம் இருந்து இக்கப்பல்களைப் பாதுகாக்கும் பணியில் இந்திய கடற்படை மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருவதற்கு அமெரிக்க அரசு உட்பட பல நாட்டு அரசுகள் பாராட்டு தெரிவித்துள்ளன.

ஆனால், மன்னார் வளைகுடா பகுதியில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை சுட்டுத் தள்ளுகிறது. ஆடு, மாடுகளை ஓட்டிக்கொண்டு போவது போல, நமது மீனவர்களைப் பிடித்துக் கொண்டு போகிறார்கள்.

நமது மீனவர்களுக்கு சொந்தமான இயந்திரப் படகுகள், மீன்வலைகள் போன்றவை பறிமுதலும், சேதமும் செய்யப்படுகின்றன. மீனவர்கள் பிடித்த மீன்கள் கொள்ளையடிக்கப் படுகின்றன. 1983 ஆம் ஆண்டில் இருந்து கடந்த 40 ஆண்டு காலமாக எவ்வித அச்சமுமில்லாமல் இலங்கை கடற்படை தமிழக மீனவர்களை வேட்டையாடி வருகிறது. ஆனால், அவர்களைப் பாதுகாக்கும் வகையில் இந்திய கடற்படை இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இராமேஸ்வரத்துக்கு அருகிலுள்ள மண்டபத்தில் இந்திய கடலோரக் காவல்படையின் கப்பல்கள் நிறுத்தப்படுகின்றன. கடற்படையோ, கடலோரக் காவல்படையோ இதுவரை இலங்கை கடற்படைக்கு எதிராக ஒரு சிறுநடவடிக்கைகூட எடுக்கவில்லை.

எங்கேயோ இருக்கிற சோமாலியா நாட்டுக் கடற்கொள்ளையர்களிடம் இருந்து உலக நாடுகளின் கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் இந்தியக் கடற்படை, இலங்கை கொள்ளையர்களிடம் இருந்து நமது மீனவர்களைப் பாதுகாக்கும் கடமையைச் செய்யத் தயங்குவது ஏன்?

கச்சதீவு பிரச்சினையில் பா.ஜ.கவும், காங்கிரஸும் மாறிமாறி குற்றம்சாட்டிக் கொண்டிருக்கின்றன. ஆனால், மன்னார் வளைகுடா பகுதியில் அத்துமீறி நமது மீனவர்களுக்கு எதிராக தொடர்ந்து செயல்பட்டு வரும் இலங்கை கடற்படைக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்க இந்தியக் கடற்படையும், கடலோரக் காவல்படையும் இதுவரை முன்வராதது ஏன் என்பதுகுறித்து மக்களிடம் இரு கட்சிகளும் விளக்க வேண்டும்." – என்று குறிப்பிட்டுள்ளார்.



# இந்தியாவில் வெப்ப அலை வீசும்: வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை

இந்தியாவில் கோடை காலம் தொடங்கியுள்ள நிலையில், அங்கு வெப்பம் அதிகரித்து வருகிறது.

இவ்வாண்டு முழுதும் வெப்பநிலை அதிகரித்துக் காணப்படும் என இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கோடை காலம் நிலவும் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலகட்டத்தில் வழக்கத்தைவிட வெப்பம் அதிகமாக இருக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் கிழக்கு, வடகிழக்கு மற்றும் வடமேற்கு பகுதிகளில் சில இடங்களில் மாத்திரம் வெப்பம் குறைவாக இருக்கக்கூடும் என அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் இந்தியாவின் தென் பகுதி, மத்திய இந்தியா, கிழக்கிந்தியா, வடமேற்கு இந்தியாவின் சமவெளிப் பகுதிகளில் வழக்கத்தை விட அதிகமான வெப்ப அலை வீசும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த காலகட்டத்தில் மழை பெய்யும் விகிதம் சராசரியை ஒட்டியே இருக்கும் எனவும் கிழக்கு, மேற்கு கடற்கரையோரப் பகுதிகளிலும் வடகிழக்கின் சில பகுதிகளிலும் வழக்கத்தை விட மழை குறைவாக இருக்கும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.

## பிரபல நகைச்சுவை நடிகர் விஸ்வேஷ்வர ராவ் காலமானார்



பிரபல நகைச்சுவை நடிகர் விஸ்வேஷ்வர ராவ் உடல்நலக்குறைவு காரணமாக காலமானார். அவருக்கு வயது 62.

பாலா இயக்கத்தில் வெளியான 'பிதாமகன்' படத்தில் லைலாவுக்கு அப்பாவாக நடித்திருப்பார் விஸ்வேஷ்வர ராவ். தமிழ், தெலுங்கு படங்களில் நகைச்சுவை நடிகராக புகழ்பெற்றவர். தனது 6 வயதில் இருந்தே நடிக்க தொடங்கிவிட்ட விஸ்வேஷ்வர ராவ் இதுவரை 350 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். சினிமா தவிர்த்து சின்னத்திரை தொடர்களிலும் நடித்துள்ளார்.

இந்த நிலையில், உடல்நல பாதிப்புக் காரணமாக காலமான விஸ்வேஷ்வர ராவ் உடல் சென்னை சிறுசேரியில் இருக்கும் அவரது இல்லத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதிச் சடங்குகள் இன்று நடைபெறுகின்றது.

பக்கங்கள் - 4
கனடா முரசு
புதன்கிழமை 03/04/2024

## ஹெமில்டன் பூங்காவில் ஒருவரின் சடலம் மீட்பு

ஒன்ராரியோ,ஏப்ரல் 03

ஹெமில்டன் பூங்காவில் உயிரிழந்த நபர் ஒருவரின் சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பேர்லிங்டன் ஸ்ட்ரீட் ஈஸ்ட் C2




# 2024 இல் வீடமைப்புக்காக ஆறு பில்லியன் டொலர்கள்!

## லிபரல் அரசாங்கம் ஒதுக்கியுள்ளது

**ஒன்ராரியோ, ஏப்ரல் 03**

**வீடமைப்புக்காக 2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் 6 பில்லியன் டொலர்களை லிபரல் அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.**

**இந்த வீடமைப்பு நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு மாகாணங்களும், பிராந்தியங்களும் குறிப்பிட்ட வீடமைப்பு கொள்கைகளை உள்வாங்க வேண்டும் என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.**

வரவு – செலவுத் திட்டத்தின் புதிய அம்சங்களை மக்கள்மயப்படுத்தும் கூட்டங்களை நாடு முழுவதிலும் அரசாங்க அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த அடிப்படையில், பிரதமர் ட்ரூடோ மற்றும் வீடமைப்பு அமைச்சர் சோன் பிரேசர் டார்த்மவுத் பகுதியில் நிகழ்வொன்றில் கலந்துகொண்டனர்.

விரைவாக அதிக வீடுகளை அமைப்பதே கனடியர்கள் தற்போது எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்கான சிறந்த தீர்வு என பிரதமர் ட்ரூடோ கூறியுள்ளார்.

அடுத்து வரும் காலப்பகுதியில் நகரத்தின் வீடமைப்புத் தேவைகளுக்கு உதவுவதற்கு 1 பில்லியன் டொலர்களை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

# 4 ஹெலிகளை வாங்குகிறது ஒன்ராரியோ மாகாண அரசு!

## பொலிஸாரின் பயன்பாட்டுக்காக

முதல்வர் டக் போர்ட் தலைமையிலான ஒன்ராரியோ மாகாண அரசாங்கம் நான்கு ஹெலிக்கொப்டர்களை கொள்வனவு செய்ய உள்ளது.

பொலிஸாரின் பயன்பாட்டுக்காக இந்த ஹெலிக்கொப்டர்கள் கொள்வனவு செய்யப்பட உள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. C2





# காசாவில் நிவாரணப் பணியாளர்களின் மீதான இஸ்ரேலின் வான் தாக்குதலுக்குக் கண்டனம்

## அமெ., ஆஸி, போலந்துடன் சேர்ந்து கனடாவும் தெரிவிப்பு

ஒன்ராரியோ,ஏப்ரல்03

காசா பகுதியில் நிவாரணப் பணியாளர்கள் மீதான இஸ்ரேலின் விமானத் தாக்குதலை கனடா கண்டித்துள்ளது.

நிவாரணப் பணியாளர்களை தாக்குவது 'முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாதது' என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, போலந்து மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுடன் இணைந்து இந்தக் கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.

ஏப்ரல் 2ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட இந்த தாக்குதலில் ஏழு நிவாரணப் பணியாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பான முழுமையான விசாரணை முன்னெடுக்கப்படல் வேண்டும் கனடா உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

உயிரிழந்தப் பணியாளர்களில் கனடிய-அமெரிக்க குடியுரிமை கொண்ட 33 வயதான ஜேக்கப் பிக்கிங்கரும் உள்ளடங்குகின்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நிவாரணப் பணியாளர்களின் நடமாட்டம் தொடர்பில் இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினருக்கு அறிவிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையின் மத்தியில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக வேர்ல்ட் சென்ரல் கிச்சன் என்கிற நிவாரணக் குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது நிவாரணக் குழுவின் மீதான தாக்குதல் மாத்திரமன்றி, யுத்தத்தின் ஆயுதமாக உணவு மாற்றப்படும் மனித நேய நிறுவனங்கள் எதிர்கொண்டுள்ள சவாலை குறிப்பதாகவும் அந்த நிறுவனத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

---

### ஹெமில்டன் பூங்காவில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் ஜேம்ஸ் ஸ்ட்ரீட் நோர்த் அருகில் லியன்டர் போட் கிளப்பிற்கு பின்னால் இருந்து ஆணொருவரின் சடலம் நேற்று ஏப்ரல் 2ஆம் திகதி கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த நபர் மற்றும் சந்தேக நபர் குறித்த விவரங்களை எதனையும் பொலிஸார் இதுவரை வெளியிடவில்லை.




---

### 4 ஹெலிகளை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கார் கொள்ளைகளை தடுப்பதற்கும், காணாமல் போனவர்களைத் தேடுவதற்கும் இந்த நான்கு ஹெலிக்கொப்டர்களும் பயன்படுத்தப்பட உள்ளன.

றொறன்ரோ, பீல், ஹால்டன் மற்றும் டர்ஹம் பிராந்திய பொலிஸார் இணைந்து ஹெலிக்கொப்டர் பொலிஸ் சேவையை வழங்க உள்ளனர்.

இந்த ஹெலிக்கொப்டர்களை கொள்வனவு செய்வதற்கு 36 மில்லியன் டொலர் நிதி செலவிடப்பட உள்ளது. பராமரிப்பிற்காக 10 மில்லியன் டொலர் செலவிடப்பட உள்ளது.

இந்த ஹெலிக்கொப்டர்களை மாகாண பொலிஸார் பயன்படுத்துவார்களா அல்லது பிராந்தியப் பொலிஸார் பயன்படுத்துவார்களா என்பது பற்றிய விவரங்கள் எதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

அண்மை நாகளாக கனடாவின் பல பகுதிகளிலும் கார் திருட்டுச் சம்பவங்கள் வெகுவாக அதிகரித்துள்ளன.

இவ்வாறான ஓர் பின்னணியில் ஹெலிக்கொப்டர்களைக் கொண்டு இந்த கார் திருட்டுச் சம்பவங்கள் கட்டுப்படுத்தப்பட உள்ளன.



# செலவு குறைவான நகரங்களை நோக்கி வீடுகளை விற்று விட்டு கனடியர்கள் நகர்வு

ஒன்ராரியோ, ஏப்ரல் 03

முக்கிய நகரங்களில் சொகுசு இல்லங்களை விற்று விட்டு வாழ்க்கைச் செலவு குறைந்த நகரங்களை நோக்கி கனடியர்கள் நகர்வதாக அண்மைய அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

டொரன்டோ பெருநகரப் பகுதியில் சொகுசு இல்லங்களில் விற்பனை 14 சதவீதம் அதிகரிப்பைக் கண்டுள்ளதாக ரீமெக்ஸ் நிறுவனத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், கல்கரி, மொன்ரியல் மற்றும் சசகட்டூன் நகரங்களுடன் ஒப்பிடும் போது இந்த அளவு மிகவும் குறைவானது என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நகரங்களில் சொகுசு இல்லங்களின் விற்பனை அளவு 50 சதவீதத்திற்கு அதிகமாக பதிவாகியுள்ளது.

வாழ்க்கை செலவு அதிகரித்த ஒன்ராரியோ மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியா ஆகிய மாகாணங்களில் இருந்து அதிக விலை கொடுத்து இல்லங்களை வாங்கக் கூடியவர்கள் மேற்குறிப்பிட்ட நகரங்களை நோக்கி நகர்வதே விற்பனை அதிகரிப்புக்கான காரணமாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# கார்பன் விலை அதிகரிப்பு நீக்கம் அல்லது பிரதமர் ட்ரூடோ நீக்கம்!

## ஒன்ராரியோ முதல்வர் டக் போர்ட் வலியுறுத்து

ஒன்ராரியோ,ஏப்ரல்03

கனடிய மாகாண முதல்வர்கள் மற்றும் பிராந்திய தலைவர்களுடன் அவசர கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்யுமாறு எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொலிவர் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிடம் கோரியுள்ளார்.

பிரதமர் ட்ரூடோவின் அரசியல் எதிர்காலம், நுகர்வோர் கார்பன் விலை அதிகரிப்பு குறித்த தீர்மானத்திலேயே தங்கியிருக்கின்றது என ஒன்ராரியோ முதல்வர் டக் போர்ட் எச்சரிக்கை விடுத்த நிலையிலேயே, எதிர்க்கட்சித் தலைவரின் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

அடுத்த தேர்தலில் வெற்றி பெற்றுப் பிரதமராக தெரிவானால், உடனடியாக இந்த கார்பன் விலை அதிகரிப்பு இரத்துச் செய்யப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் பொலிவர் உறுதியளித்துள்ளார்.

ஏப்ரல் 2ஆம் திகதி ஊடகத்திற்கு கருத்து தெரிவித்த முதல்வர் போர்ட், கார்பன் விலை நீக்கப்படல் வேண்டும் அல்லது பிரதமர் ட்ரூடோ நீக்கப்படல் வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் புதிய வரவு செலவுத் திட்டத்தின் பல்வேறு மக்கள் திட்டத்தை லிபரல் அரசாங்கம் அறிவித்து வருகின்ற நிலையில், கார்பன் விலை அதிகரிப்பு என்பது லிபரல் அரசாங்கத்தை அசைக்கும் விடயமாக மாறிவருகின்றது.

# தேர்தலில் வெல்ல சீன மாணவரை பயன்படுத்தினார் முன்னாள் எம்.பி.

ஒன்ராரியோ, ஏப்ரல் 03

முன்னாள் லிபரல் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேன் டொங் சீனாவில் இருந்து வந்திருந்த சர்வதேச மாணவர்களைப் பயன்படுத்தி வேட்பு மனுப் போட்டியில் வெற்றியீட்டியமை தெரிய வந்துள்ளது.

கனடியத் தேர்தல்களில் வெளிநாடுகளின் தலையீடுகள் குறித்து விசாரணை செய்யும் குழுவின் விசாரணையின் போது இந்த விடயங்களை ஹேன் தெரிவிக்கவில்லை எனக் குறிப்பிடப்படுகின்றது.

பொது விசாரணையொன்றில் சாட்சியமளித்த போதே ஹேன் இந்த விடயங்களை ஒப்புக் கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



நாடாளுமன்றத் தேர்தலுக்கு போட்டியிடுவதற்கான வேட்பாளராக வருவதற்கு சீனாவில் இருந்து வந்திருந்த சர்வதேச மாணவர்களை லிபரல் உறுப்பினர்களாகப் பதிவு செய்வதற்கு தாம் ஊக்கமளித்தார் என்பதை ஹேன் ஒப்புக் கொண்டுள்ளார்.

## பதினொரு வயது சிறுவனை கடித்துக் கொன்ற நாய்கள்!

அல்பேர்ட்டா, ஏப்ரல் 03

எட்மன்டன் பகுதியில் நாய்கள் கடித்து பதினொரு வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

இரண்டு பெரிய நாய்கள் கடித்து கடும் காயமுற்ற அந்தச் சிறுவனை காப்பாற்றுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும், சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தான் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சிறுவன் அடிக்கடி சென்று வரும் வீட்டில் இந்த இரண்டு நாய்கள் வசித்து வந்தன எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நாய்கள் எந்த வர்க்கத்தைச் சேர்ந்தவை என்ற விவரங்களைப் பொலிஸார் வெளியிடவில்லை, மாறாக இரு பெரிய நாய்கள் என விளக்கியுள்ளனர்.

## அல்பேர்ட்டா சுகாதார சேவை 4 நிறுவனங்களாக மாறுகிறது

அல்பேர்ட்டா, ஏப்ரல் 03

அல்பேர்ட்டா மாகாண அரசாங்கம் செவ்வாயன்று அல்பேர்ட்டா ஹெல்த் சர்வீசஸ் (யுஉளு)ஐ நான்கு தனித்துவமான நிறுவனங்களாக மாற்றியமைக்கும் திட்டத்தில் முதல் பகுதியை வெளியிட்டது.

மனநலம் மற்றும் அடிமையாதல் சேவைகளை வழங்குவதை நிர்வகிக்கும் இரண்டு புதிய நிறுவனங்களை இந்தப் பகுதி கோடிட்டுக் காட்டுகிறது.

மேலதிகமாக, அல்பேர்ட்டா மாகாணமானது ஒரு புதிய அரசாங்க கூட்டுத்தாபனத்தை உருவாக்குவதாகக் கூறியுள்ளது.

இது கனடியன் செண்டர் ஆஃப் ரெக்கவரி எக்ஸலன்ஸ் அல்லது ஊமுசுநு என்று இது அழைக்கப்படுகிறது.



# பூர்வீகக் குடியினருக்கு நிலங்களை கையகப்படுத்த வழி செய்யும் சட்டம்

பிரிட்டிஷ் கொலம்பியா,ஏப்ரல் 03

பிரிட்டிஷ் கொலம்பியாவின் அரசாங்கம் மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற பூர்வீகக் குடியினருக்கு மாகாணத்தில் நிலத்தை கையகப்படு–த்தவும் வைத்திருக்கவும் சட்டப்பூர்வ உரிமையை வழங்கும் ஒரு சட்ட மூலத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் பூர்வீக உறவுகளுக்கான அமைச்சு, நில உரிமை மற்றும் சொத்துச் சட்டங்களில் ஏற்படும் மாற்றங்கள், நில உரிமை அலுவலகத்தில் பதிவு செய்ய முதல் தேசங்களை அனுமதிக்கும், நிலத்தை சொந்தமாக்குவதற்கான 'பாரபட்சமான மற்றும் இனவெறித் தடைகளைக் குறைக்கும்' என்று கூறுகிறது.

ஒப்பந்தம் போன்ற 'குறிப்பிட்ட சட்டத்தின் மூலம்' செயல்படுத்தப்பட்டாலன்றி, மாகாணத்தில் உள்ள பூர்வீகக் குடியினருக்கு தற்போது தங்கள் சொந்த பெயரில் நிலத்தை கையகப்படுத்தவோ, வைத்திருக்கவோ அல்லது அகற்றவோ முடியாது என்று அறிக்கை கூறுகிறது.

அந்த வழிகள் இல்லாத பூர்வீகக் குடியினருக்கு நிலம் கையகப்படுத்துதல் மற்றும் வைத்திருக்கும் நோக்கங்களுக்காக நிறுவனங்களை அல்லது மாற்று ஏற்பாடுகளை அமைக்க வேண்டும் என்பதாகும்.